செ.வெ. எண்: 784 4/11/09

# செய்தி வெளியீடு

## குடும்பத் தலைவியருக்கான சமையற்கலைத் திறன்– பணிநுட்பங்களை மேம்படுத்தப் பயிற்சி வகுப்பு

மைய அரசின் சுற்றுலாத்துறையால் தேசிய அளவில் உருவாக்கப்பட்ட முன்னணி நிறுவனங்களில் ஒன்றான “உணவக மேலாண்மை, சமையல் கலை மற்றும் ஊட்டநெறி தொழில்நுட்பக் கல்லூரி” சென்னையிலுள்ள தரமணியில் தமிழக அரசுடன் ஒருங்கிணைந்து 1963ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இங்கு, பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, சான்றிதழ் படிப்பு ஆகிய நிலைகளில், விருந்தோம்பல், உணவு விடுதி நிர்வாகம் போன்றவைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு உணவக மேலாண்மை மற்றும் விருந்தோம்பல் துறைக்குத் தேவையான பணிவாய்ப்புகளை உருவாக்கி வருகிறது.

இக்கல்லூரியில், பணியாளர்களுக்கான திறன் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் விருந்தோம்பல் துறைக்கான பயிற்சிகளை அளிப்பதற்கான அடிப்படை வசதிகள் உள்ளன. தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்து வருபவர்களுக்கு இதுபோன்ற திறன்களை வளர்ப்பதற்கான குறுகிய கால வகுப்புகள் மைய அரசின் சுற்றுலாத்துறையின் CBSP (Capacity Building for Service Providers) திட்டத்தின் வாயிலாக இலவசமாக அளித்து வருகிறது.

இந்நிறுவனத்தின் வாயிலாக குடும்பத் தலைவியருக்கு, இந்திய, இத்தாலிய, சீன நாட்டின் சைவ – அசைவ உணவு வகைகளைத் தயாரித்தல், பேக்கரி – தின்பண்ட வகைகளைத் தயாரித்தல், உணவு வகைகளைப் பரிமாறுதல், மேஜை வடிவமைப்பு – மலர் அலங்காரங்கள் செய்தல் ஆகியவற்றில் இரண்டு வாரங்களுக்கான பயிற்சி வகுப்பு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி வகுப்பு வருகிற டிசம்பர் மாதம் (2009) மூன்றாவது வாரத்தில் தொடங்கி திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை மாலை 2 மணி முதல் 5 மணி வரை 10 நாட்கள் நடத்தப்பட உள்ளது.

இந்த வகுப்புகளில் குடும்பத் தலைவியருக்கு பல்வேறு உணவு வகைகள் குறித்த செய்முறைகள் நிகழ்த்திக் காட்டப்படும். அது குறித்த குறிப்பேடுகளும் வழங்கப்படும். இப்பயிற்சிக்கென ஒரு நபருக்குக் குறைந்த கட்டணமாக ரூபாய் 3,000/– வசூலிக்கப்படும்.

குடும்பத் தலைவியரும், இளம்பெண்களும் தங்கள் சமையல் கலைத் திறனையும், பணிநுட்பங்களையும் மேம்படுத்திக் கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விருப்பமுள்ளோர் சென்னை தரமணியில் அமைந்துள்ள “உணவக மேலாண்மை, சமையல் கலை மற்றும் ஊட்டநெறி தொழில்நுட்பக் கல்லூரி” முதல்வரைத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. (தொலைபேசி எண்கள்: 22542029/22541262 மின் அஞ்சல்:– ihmchen@dataone.in)

4/11/2009
செயலாளர்,
சுற்றுலா (ம) பண்பாட்டுத்துறை.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9